**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண். 40 /2024**

**வாக்குமூலம்: பி.வா.சா.1 – தினேஷ்குமார்**

**17.08.2026: சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. வா.சா.ஆ.1ல் 2வது அயிட்டத்தில் வண்டிப் பாதைக்காக 3 செண்ட் நிலம் வாதியிடமிருந்து கிரையம் வாங்கினேனா என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதியாகிய நான் 2ஆம் பிரதிவாதிக்கு பாதையை தானபத்திரத்தின் மூலமாக எழுதிக் கொடுத்தேனா என்றால் சரிதான். நான் 3 செண்ட் மட்டும் பாதைக்காக கிரையம் பெற்று விட்டு 2ஆம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்டில் 1900 சதுரடி எழுதிக் கொடுத்தது செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ல் சொத்து விபரத்தில் 1900 சதுரடி எழுதிக் கொடுத்தது செல்லாது என்றால் சரியல்ல. சர்வே எண்.95/20 ல் கூட்டுப்பட்டாவாக உள்ளதால் அரசாங்கத்தால் அப்ரூவல் வழங்கவில்லை என்றால் சரியல்ல. அரசாங்கம் அப்ரூவல் வழங்கவில்லை என்பதாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. சர்வே எண்.97, 98லிருந்து பாதைக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சர்வே எண் ஞாபகமில்லை.

2. பத்திரப்படி பாதை உள்ளது. பத்திரப்படி பாதை அமைக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆனது சர்வே எண்.151/2 க்கான என் பெயரில் உள்ள கூட்டுப்பட்டா என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ன்படி Detailed card track இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ல் கிழமேல் பாதை இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 மற்றும் 2ன் மேல் மேல்முறையீடு வழக்கு மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் வாதிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. அதனால் வாதி 1ஆம் பிரதிவாதிக்கும் 95/20 பாதைக்காக எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பிராது படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledge by him/her to be correct

APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.08.17 19:03:39 +0530

District Munsif,
Palani.